**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 376 /2019 PW .1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இராஜ்குமார் | தந்தை/கணவர் பெயர்: அன்தோனி தாஸ் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.02.2026

---

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**23.02.2026 மனுவின் பெயரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவம் நடந்து 4 மாதம் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சிங்கம்புணரி மணப்புறம் பைனான்ஸில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மாதத்திற்கு பின்னர் வேறு கிளைக்கு மாறுதல் ஆகி சென்றுவிட்டேன். தற்போது அங்கு நான் பணிபுரியவில்லை. எந்த தேதியில் பெட்டகத்தில் இருந்த நகை மாற்றப்பட்டது என்றால் நான் பெட்டகத்திலிருந்து நகை மாற்றப்பட்டதை நேரடியாக பார்க்கவில்லை. எந்த தேதியில் மாற்றப்பட்டது என்று எனக்கு தெரியாது. பெட்டகம் உடைக்கப்படவில்லை. பெட்டகத்தை சாவி இல்லாமல் திறக்க முடியாது. எந்த தேதியில் போலிநகைகள் 4 பாக்கெட்டில் வைக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி போலி நகை வைக்கப்பட்டிருந்தது தெரிந்திருந்தால் அன்றே புகார் கொடுத்திருப்பேன்.

2. 28.04.2017ம் தேதி மேற்படி பாக்கெட் பிரிக்க முடியாதப்படிக்கு ஒட்டப்பட்டிருந்ததாக சொல்லப்படும் அந்த தேதியில் 2ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் பணி புரிந்தார். ஆஷா, செல்வராஜ் கருப்பாயி, ஷாகுல் ஹமீது, ஆகியோர் எங்கள் நிறுவனத்தில் நகை அடகு வைக்கும் போது நான் பார்க்கவில்லை. இவ்வழக்கில் காணாமல் போனதாக சொல்லப்படும் நகைகள் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கவில்லை. ஆஷா, செல்வராஜ் , கருப்பாயி, ஷாகுல் ஹமீது, ஆகியோர்

காவல் நிலையத்திலோ, எங்களிடமோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . தணிக்கை நடைபெறும் போதும் Auditor –ம், துணை மேலாளரும் பாக்கெட்டுகளை பிரித்து சரிபார்த்து பின்னர் Auditor எடை மற்றும் எண்ணிக்கையை சரிபார்த்து பாக்கெட்டில் வைத்து பிரிக்க முடியாத பார்கோர்டு ஸ்டிக்கர் ஒட்டி அதனை உதவி மேலாளாரரிடம் கொடுத்து அவர் பெற்று பாக்கெட்டுடன் மொத்த எடை சரிபார்த்து பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பது எங்களுடைய செயல் முறை ஆணை என்றால் சரிதான் . இவ்வழக்கில் நேரடியாக எதுவும் எனக்கு தெரியாது . இவ்வழக்கிற்கும் 2 ம் எதிரிக்கும், எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

3. நான் கொடுத்துள்ள புகார் அ .தசா.ஆ–1ல் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் பண பரிமாற்றம் அதிகமாக உள்ளதால் CCTV கேமரா பொருத்தியுள்ளோம் என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும் போது மேற்படி CCTV புட்டேஜ் காவல் நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 4 நபர்கள் அடமானம் வைத்தார்கள் என்பதற்கு காவல்நிலையத்தில் ஆவணங்கள் கொடுத்தேனா என்றால் இல்லை. காவல் நிலையத்திலிருந்து என்னிடம் மேற்படி ஆவணங்கள் கேட்டு பெறவில்லை . மேற்படி நிறுவனத்தின் சாவியை பராமரித்து வரும் மேலாளர் மீது புகாரோ, வழக்கோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். நகை அடமானம் வைத்த தேதியிலிருந்து புகார்கொடுத்த தேதிவரை உள்ள CCTV பதிவுகளை பார்வையிட்டால் அடமானம் விவரங்கள் தெரியும் என்றால் சரிதான் . 6மாதம் நகை குறைவதாக புகார் ஏதும் வரப்பட்டதா என்றால் இல்லை . நகை குறைந்ததற்கான CCTV புட்டேஜை நான் ஆய்வு செய்யவில்லை.

4. 1ம் எதிரி எங்கள் நிறுவன கிளையில் நிரந்தர பணியாளர் கிடையாது என்றால் சரிதான். எங்கள் நிறுவன பரிந்துரை மற்றும் உத்தரவுன் பேரில் Auditing செய்வார் என்றால் சரிதான். பார்கோடு ஸ்டிக்கர் அந்த கிளை நிறுவனத்தில் இருக்ககூடியது என்றாலும் தணிக்கை அலுவலர் கொண்டுவருவது இல்லை என்றாலும் சரிதான் . தணிக்கை அலுவலர் பூர்த்தி செய்தததை மேலாளர் தணிக்கை அலுவலர் கண் முன்பாக ஒட்டி பெட்டகத்தில் வைப்பார்கள் என்றால் சரிதான்.

5. சம்பவம் நடந்து 4 மாதம் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் சிங்கம்புணரி மணப்புறம் பைனான்ஸில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட

இரண்டு மாதத்திற்கு பின்னர் வேறு கிளைக்கு மாறுதல் ஆகி சென்றுவிட்டேன் . தற்போது அங்கு நான் பணிபுரியவில்லை. எந்த தேதியில் பெட்டகத்தில் இருந்த நகை மாற்றப்பட்டது என்றால் நான் பெட்டகத்திலிருந்து நகை மாற்றப்பட்டதை நேரடியாக பார்க்கவில்லை. எந்த தேதியில் மாற்றப்பட்டது என்று எனக்கு தெரியாது . பெட்டகம் உடைக்கப்படவில்லை. பெட்டகத்தை சாவி இல்லாமல் திறக்க முடியாது . எந்த தேதியில் போலிநகைகள் 4 பாக்கெட்டில் வைக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது . மேற்படி போலி நகை வைக்கப்பட்டிருந்தது தெரிந்திருந்தால் அன்றே புகார் கொடுத்திருப்பேன்.

6. 28.04.2017ம் தேதி மேற்படி பாக்கெட் பிரிக்க முடியாதப்படிக்கு ஒட்டப்பட்டிருந்ததாக சொல்லப்படும் அந்த தேதியில் 2ம் எதிரி எங்கள் நிறுவனத்தில் பணி புரிந்தார். ஆஷா, செல்வராஜ் கருப்பாயி, ஷாகுல் ஹமீது, ஆகியோர் எங்கள் நிறுவனத்தில் நகை அடகு வைக்கும் போது நான் பார்க்கவில்லை . இவ்வழக்கில் காணாமல் போனதாக சொல்லப்படும் நகைகள் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கவில்லை. ஆஷா, செல்வராஜ் , கருப்பாயி, ஷாகுல் ஹமீது, ஆகியோர் காவல் நிலையத்திலோ, எங்களிடமோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . இவ்வழக்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல . நிறுவனத்தில் ஏற்பட்ட முறை கேடுகளை மறைப்பதற்காக 1ம் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் , இடத்தில் , தேதியில் , விதத்தில் 1ம் எதிரி எவ்வித குற்ற சம்பவத்தில் ஈடுபட வில்லை என்றால் சரிதான்.